யாழ்ப்பாண பொதுநூலகம்
நல்லூர் கிளை நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 28 றஜப் 29 இதழ் 59
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-4-1986

## ● இலங்கையில் வல்லரசுகள் தலையிடும் அபாயம்! பஹுத் அச்சம்

(சென்னை)
இலங்கை இனப்பிரச்னைக் குத்தீர்வு காணும் போக்கில், இஸ்ரேலினதும் பாகிஸ்தானினதும் பங்கு அதிகரித்துவருவதினால் இலங்கை நிலைமை மேலும் சிக்கலடைந்துவருவது மட்டுமன்றி, இதனால் இலங்கையில் வல்லரசுகள் தலையீடு மேற்கொள்ளும் அபாயம் தோன்றியுள்ளதாக அமைச்சர் பி. ஆர். பஹுத் அச்சம் தெரிவித்துள்ளார்.

மக்கள் அவையில் திரு. பி. குழந்தைவேலுவின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்துப் பேசுகையிலேயே மேற் கண்டவாறு அச்சம் லெரிவித்துள்ளார்.

திரு. பி. ஆர். பஹுத் அங்கு மேலும் பேசுகையில் இலங்கை இனப் பிரச்னையை இந்தியா உள்நாட்டுப் பிரச்னை என்ற நிலையிலேயே இன்னமும் கருதி வருவதாகவும் அவர் கூறினர். (வா)

# ● இலங்கை நிலைபற்றி எம். ஜி. ஆர். நீதிசெத்த நிலையில்தான் தமிழ் இளைஞர் போராடுகின்றனர்!

(புதுடில்லி)
'சட்டமும் நீதியும் செத்த ஒரு சூழலிலேயே இலங்கைத் தமிழ் இளைஞர்கள் சுயபாதுகாப்பின் நிமித்தம் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். அரச யந்திரம் தமக்கு எதிராக ஏவிவிடப்பட்டுள்ள தருணத்திலும் தமது இன்னல்களை எடுத்துரைக்க ஓர் அரசியல் ரீதியான அமைப்பு இல்லாத சூழலிலுமே தமிழ் இளைஞர்கள் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளிவிடப்பட்டுள்ளனர்''.

தேசிய ஒருமைப்பாட்டுப் பட்டிமன்றத்தில் பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி. ராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினர்.

பஞ்சாப்பில் நடக்கும் வன்செயல்களையும் ஈழப்போராளிகளின் போராட்டத்தையும் சிலர் ஒருசேர இணைத்துப்பேசுவதற்குக்கண்டனம் தெரிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

''இலங்கைத்தமிழர் பிரச்னையிலிருந்து பஞ்சாப் பிரச்னை பெரிதும் வேறுபட்டது. பஞ்சாப் மாநிலத்தில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரச நிர்வாகம் இருக்கவே செய்கிறது. ஒரு சிலர் மட்டும் பஞ்சாப் மாநில நிர்வாகத்துக்கும் மக்களுக்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

[5ம் பக்கம் பார்க்க]

## தொண்டமானாற்றில் இரு ராணுவம் பலி!

(வல்வெட்டித்துறை)
தொண்டமானாறு இராணுவ முகாம்மீது போராளிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாகவும் அதில் ஒருவர் கப்டன் ஜெயவர்த்தன எனவும்தெரிய வருகிறது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்தைத்தொடர்ந்து நேற்றுமுன்தினமும் நேற்றுக்காலையிலும் தொண்டமானாற்றில் ஹெலிகொப்டரிலிருந்து தொண்டமானாறு முகாமைச் சுற்றியுள்ள வீடுகள் பீரங்கிகளாலும், துப்பாக்கிகளாலும் தாக்கப்பட்டுத் தகர்க்கப்பட்டன.

## புதுவருடத்தையொட்டி வவனியா - யாழ்ப்பாணம் ரயில் - பஸ் இணைப்புச்சேவை

(யாழ்ப்பாணம்)
புதுவருடப்பிறப்பையொட்டி வவனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் பிரயாணிகள் சௌகரியமாகப் போய்வரும் வகையில் 15 பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு வடபிரதேச போக்குவரத்துச்சபை பணிப்பாளர் திரு. எஸ் கனகரத்தினம் ஏற்பாடு செய்துள்ளார்.

அனுராதபுரம்வரை தற்பொழுது நடைபெற்றுவரும் ரயில் சேவையை புதுவருடத்தையொட்டி போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். மொகமட்டின் பணிப்பின்பேரில் இம்மாதம் 11, 12, 15, 16, 17ம் திகதிகளில் வவனியாவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இம்மாதம் 11ம், 12ம் திகதிகளில் வவனியா புகையிர நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 15 விசேட பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வ.பி.போ.வ.ச பணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார்.

## கண்ணிவெடியில் இரு பொலிசாரும் சிவிலியனும் பலி!

(மன்னர்)
தலைமன்னாரில் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் ஜீப்வண்டியில் சென்றுகொண்டிருந்த ஒரு உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள் ஒருவரும், பொதுமக்களில் ஒருவரும் பலியானதாக அரசு அறிவித்துள்ளது

## சட்டமன்றத்துக்கு 'வெண்ணிறஆடை' நிர்மலா

(சென்னை)
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களாக செல்வி 'வெண்ணிறஆடை' நிர்மலா. என். சி. ராகவாச்சாரி, ஜி. சாமிநாதன் ஆகியோரைத் தமிழ்நாடு ஆளுநர் நியமித்துள்ளார். [வா]

## வவனியா மாவட்ட காடுகள் தடைப் பிரதேசம்

(வவனியா)
வவனியா மாவட்டத்திலுள்ள காடுகள் அனைத்தும் தடைசெய்யப்பட்ட பிரதேசமாகப்பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகவவனியா இணைப்பதிகாரிகிங்ஸ்லிஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

வவனியா மாவட்டத்திலுள்ள திணைக்களங்களின் உத்தியோகத்தர்களைக் கொண்ட மகாநாடு வவனியா இராணுவ முகாமில் நடைபெற்றது.

இம்மகாநாட்டில் இணைப்பதிகாரி உரைநிகழ்த்துகையிலேயே மேற்குறிப்பிட்ட தகவலை வெளியிட்டார்.

வவனியா மாவட்டத்திலுள்ள காடுகளில் எவரும் வசித்தல் நுழைதல், பிரயாணம்செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளதென்றும், அத்தடைகளை மீறுவோர் தேடுதலில் ஈடுபடும் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்படலாமென்றும் துப்பாக்கிப்பிரயோகத்திற்கு இலக்காகலாம் என்றும் இணைப்பதிகாரி எச்சரித்தார். [மா]

உ

திருமண அழைப்பு

நிகழும் குரோதன ஆண்டு பங்குனி மீ 29ம் நாள் (11-4 86) வெள்ளிக்கிழமை காலை 7-30 மணி தொடக்கம் 10 30 மணிவரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில்,

திருநிறைச்செல்வன்
இராஜகோபாலன்
[உதவி விரிவுரையாளர்]
அவர்களுக்கும்

திருநிறைச்செல்வி
லதா
அவர்களுக்கும்

பருத்தித்துறை ஸ்ரீமுருகன் ஆலய மண்டபத்தில் திருமணம் நடைபெறும், அனைவரையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்.

திரு. திருமதி
க. இராஜரெட்ணம்,
557, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
M. விஸ்வரெட்ணம்,
பிரதான வீதி,
புலோலி மேற்கு
(C. 1692)

## மணி ஓடரில் அனுப்பக்கொடுத்த முருங்கன் படையினரின் பணம் அபேஸ்!

(யாழ்ப்பாணம்)
முருங்கன் இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினர் சிலர் தமது வீடுகளுக்கு மணியோடர் மூலம் பணம் அனுப்பி வைப்பதற்காக இம்முகாமில் வேலைசெய்யும் சிற்றூழியர் ஒருவரிடம் கொடுத்து அனும்பிய பணம் சுமார் 15 ஆயிரம் ரூபாவும் இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர்களால் பறித்தெடுக்கப்பட்டுள்ளதாம்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் முருங்கன் தபால் கந்தோருக்கருகாமையில் நடைபெற்றது. (ஐ)

## பேச்சுவார்த்தை சுமுகமுடிவைத் தொடர்ந்து ஆயுர்வேதக்கல்லூரி மறியல் போர் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேதக்கல்லூரி மாணவர்களின் வீதி மறிப்பு மறியல்போராட்டத்தை தொடர்ந்து இறுதி ஆண்டு டி ஏ எம் பரீட்சை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இருநாட்கள் நடந்த மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து நேற்று அத்தியடியில் கல்லூரிக்கு முன்னால் வீதிமறிப்புப் போராட்டம் நடைபெற்றது சுலோக அட்டைகளுடன் மாணவர்களும் பெற்றோரும் மறியலில் ஈடுபட்டனர் இதனால் போக்குவரத்துத்தடைப்பட்டது.

கூட்டம் நடத்துவதற்கு வந்த இயக்குநர் சபையினர் உள்ளே செல்லமுடியாமல் காலை 11 மணி வரை வீதியில் நின்றனர்.

இதன்பின்னர் தனியான ஒரு இடத்தில் இயக்குநர் சபையினர், மாணவ பிரதிநிதி

[5ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### பயிற்சி

Computer Programming Basic and Cobal ரெலிவிஷன், ரேடியோ, வீடியோ, டெக்ரெக்னோலஜி, எலக்ரிக்கல் வயறிங், வைண்டிங் வகுப்புக்கள் கூடிய நேரசெய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. ஆரம்பம்: 12-4-86 காலை 9-30 விபரங்கட்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி ரோட், (றெயில்வே கடவைக்கருகாமை), யாழ்ப்பாணம்.
C 1643

## கல்வி

க. பொ. த. [உயர்தர] 88 கலை/வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Modern Education Center, Karaveddy
[C-1669]

## தவறிவிட்டது

நடராஜா ஏகாம்பரநாதன் என்பவருடைய 84723 இலக்கமுடைய ஓய்வூதிய அட்டையும், தேசிய அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். 653, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [C 1675]

## சேவை

மருதடியில் சகாய விற்பனை. 14.4.86 மருதடி விநாயகர் தேர்த்திருவிழா அன்று மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ரூ.15/- ற்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும் 1986 ம் ஆண்டு கலண்டர், அறிவு நூல்களும், வீட்டுத் தோட்டத்திற்குரிய கீரைவிதைகளும் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்துவைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதியான பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
-மில்க்வைற் யாழ்ப்பாணம்.
[A 547]

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

# Science Centre
KARAVEDDY

**புதிய வகுப்புக்கள்**
**க. பொ. த. (உயர்) 88**
**க. பொ. த. (சாதா) 86**
**மீட்டல் வகுப்புக்கள்**
**நடைபெறுகின்றன.**
(C 1670)

## 31ம் நாள் நினைவஞ்சலி



**அருணாசலம் கந்தையா**

மலர்வு: 27-05-1898
உதிர்வு: 10-03-1986

எங்கள் குடும்பத் தலைவனாய், தெய்வமாய் ஒளி வீசி எம்மையெல்லாம் வழிநடத்தி திடீரென இறையடி சேர்ந்தாலும் உங்கள் அன்பும் பண்பும், பாசமும் எங்கள் கண்முன் நிழலாடிக் கொண்டே இருக்கின்றன. உங்கள் பிரிவால் வாடும் அனைவரும் உங்கள் ஆத்மாசாந்தி அடைய அரசடி விநயகரை பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் சரீர உதவி டரிந்தவர்களுக்கும் அனுதாப செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளும்,

அன்பு மனைவி,
அருமை பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

மங்களகிரி
கட்டுடை
மானிப்பாய். C 1658

### ஸார்ஜா கிரிக்கெட்
## இன்று ஆரம்பம்

[ஸார்ஜா]

ஸார்ஜாவில் அவுஸ்த்திரேலியா வெற்றிக் கிண்ணத்துக்காக நடைபெறவிருக்கும் ஒரு நாள் மட்டுப் படுத்தப்பட்ட சர்வதேசக் கிரிக்கெட் போட்டி இன்று ஸார்ஜாவில் ஆரம்பமாகின்றது.

இப் போட்டியில் உலகச் சாம்பியனான இந்தியா, ஆசிய சாம்பியனான இலங்கை, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் நியூசிலாந்து ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன

இலங்கைக் கிரிக்கெட்கோஷ்டிக்கு, வீரர் டுலிப் மென்டிஸ் தலைமை தாங்குகின்றார். [வி]

## அகதிகளுக்கு 'லக்ஸ்பிறே'

[யாழ்ப்பாணம்]

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்சமயம் நிவாரணம்பெறும் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்கள் உள்ள அகதிக் குடும்பங்களுக்கு தலா ஒரு பக்கட் வீதம் 'லக்ஸ்பிறே' பால்மா வழங்கப்படவுள்ளது.

இவ்விநியோகத்திற்கான உத்தரவுப் பத்திரங்கள் எதிர்வரும் 16ம், 17ம் திகதிகளில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபரால் வழங்கப்படவுள்ளன.

## 2-ம் வருட அன்பின் நினைவு

**நினைவுகள் சாவதில்லை**



**எம். பி. அமிர்தநாதன்**

பிறப்பு: 01-11-1922
இறப்பு: 10-04-1984

ஆண்டுகள் இரண்டு ஆனபின்பும் ஆறவில்லை எம் இதயக் காயம்.

இல்லை ஐயா எம்மிடையில் யாருமினி உம்மிடத்தை நிரப்புவதற்கு,

நிழல் போல எம்மை தொடர்கிறது உம்நினைவு நிர்கதியாய் எம்மை இங்கு ஏன் விட்டுச் சென்றீரோ.

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்.

''சிதம்பர வில்லா''
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
C1677

# இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 28 [10 - 4 - 1986]
கிழமை- வியாழன்
திதி- பிரதமை
பி. ப. வரை
நக்ஷத்திரம்- அச்சுவினி
மு. இ. வரை

மேடம்: அவசரப் புத்தியினால் விபரீதங்கள் விளையலாம் கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும் அமைதியுடன் இருக்கவும்.

இடபம்: மேடைப் பேச்சாளர்கள் இன்று பெரும் புகழ் அடைவர். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு.

மிதுனம்: நினைத்தது நடக்காது நிதியில் முடக்கம் உண்டு. பூமிப் பிணக்குகள் தலைகாட்டும் இன்று அதிக சிந்தனை தலையிடியைக் கொடுக்கும்.

கடகம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இன்று நிகழலாம். சிலருக்கு வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

சிங்கம்: மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர். வருகை கலகலப்பை ஏற்படுத்தும் நீண்டநாள். நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள்.

கன்னி: தூரதேச பயணம் துயரத்தைத் தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச் செலவிற்கும் இடம்உண்டு.

துலாம்: குளுமையான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் வசந்தம் வீசும். களஸ்திர வழியாலும் சுகமுண்டு

விருச்சிகம்: எதிர்பாராத இடத்திலிருந்து ஆபத்து உருவாகும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் எச்சரிக்கையாக இருக்கவும். அமைதியே நன்று.

தனுசு: இறை வழிபாடு மேலோங்கி நிற்கும். இதயத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் ஆதரவு தருவார்

மகரம்: திருப்திகரமான மாற்றங்களுக்கு இடம்உண்டு. நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள் பணவரவுமுண்டு

கும்பம்: அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். விருந்தினர்கள் வருகையுமுண்டு எதிர்பாராத வரவுமுண்டு.

மீனம்: நத்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்து கொண்டிருக்கும். மனத்தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## நன்றி நவிலல்

**திரு. க. முத்துவேற்பிள்ளை**

எமது அன்புக்குரிய குடும்பத்தவரின் ஈமக் கிரியைகள், அந்தியேட்டி கிரியைகள், சபிண்டீகரண வைபவங்களில் எம்முடன் பங்குகொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமக்கு ஆறுதல் அளித்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் நினைவு மலருக்கு நினைவுக் கட்டுரைகள், கவிதைகள் தந்து உதவியவர்களுக்கும் மற்றும்பல விதங்களிலும் எமக்கு உதவியவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி வி. முத்துவேற்பிள்ளையும் குடும்பத்தினரும்.
53, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
[C-1664]

### வருடாந்த மகோற்சவம்
(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் எனவழங்கும் இராஜராஜேஸ்வரி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

15 ம் திகதி கப்பல் திருவிழாவும், 19 ம் திகதி புஷ்பவிமானத்திருவிழாவும், 23 ம் 24 ம் திகதிகளில் தேர்த் திருவிழாவும், தீர்த்தத் திருவிழாவும இடம்பெறவுள்ளன.

## பிரயாண ஒழுங்குகள்

அவுஸ்திரேலியா செல்வதற்கு பிரயாண சீட்டுக்களும் பிரயாண காசோலைகளும் சிரமமின்றி உடனடியாக செய்து தரப்படும். அவுஸ்திரேலியாவுக்கு குடும்பமாக செல்ல விரும்புவோருக்கு பிரத்தியேக சலுகை செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு:
ராதா,
21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
C-1684]

## பிரயாண ஒழுங்குகள்
(டென்மார்க்)

குறைந்த கட்டணத்தில் டென்மார்க் [Denmark] செல்வதற்கான ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.
அத்துடன் பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மன் போன்ற இடங்களுக்குச் செல்வதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
தொடர்பு கொள்ளும் முகவரி:

**ராம்ஜீ லொட்ஜ்,**
361, 363, காலிவீதி, கொழும்பு-4.
14, யூப்பிலி பஜார், யாழ்ப்பாணம்.
[C 1653]

## A/L 88 புதிய பிரிவு ஆரம்பம் 12-4-86

சனி/ஞாயிறு மட்டும் காலை 8.30 —— 1.30 வரை
கடந்த காலப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சிறந்த ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர்.

பௌதீகம் — மணியம்
இரசாயனம் —
தாவரவியல் —
விலங்கியல் —
தூயகணிதம் —
பிரயோக கணிதம் — } வெக்டர் வேலாயுதம்

**சயன்ஸ் அக்கடமி** [B.M.C. க்கு முன்]
யாழ்ப்பாணம்.
[A 431]

## பிரயாண ஒழுங்குகள்

**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க்**

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்
**21-ம் திகதி** உங்களை அழைத்துச்செல்வார்.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**மத்திய கிழக்கு** நாடுகளில்
ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமானத்திற்கேற்ற ஒழுங்குகள் உடனடியாக செய்துதரப்படும்.

**பாஸ்போட், BOND, ரிக்கற்**
முதலியனவும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

# GROUP ATLANTIC
**HOSPITAL ROAD, JAFFNA.**
(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)
(A 420)

### மணிவாக்கு

அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என்நெஞ்சுளே

- திருமழிசையாழ்வார்

# நமது நோக்கு

## 'பகைமையைப் பயிரிடாதே'

யாழ்ப்பாணம் முழுவதிலும் துப்பாக்கி, குண்டு, துண்டுப்பிரசுரங்கள் மலிந்திருக்கின்றன. பகைமையின் சின்னங்களாகிய இவை பண்டுதொட்டு உழுதுண்டு வாழும் மக்கள் மத்தியில் இவ்வளவு விரைவில் ஏற்படுத்திய மாற்றம் பாரதூரமானது.

ஒவ்வொரு நாட்டுக்கும் மக்களுக்கும் பிரத்தியேகமான பண்புகள் திறமைகள் உண்டென்பதை நாம் மறுக்க முடியாது. சாதாரண அமெரிக்கன் ஒருநூலை படிப்பதிலும், அதனையிட்டு சிந்திப்பதிலும் பார்க்க, மக்கள் குறைந்த நெடுஞ்சாலையில் மோட்டார் செலுத்துவதில் இன்பம் காண்பான். சாதாரண ஆங்கிலேயன் காற்பந்தாட்டத்தை சுவைப்பதே ஷேக்ஸ்பியர் படிப்பதிலும் பார்க்க இனிதெனக் கொள்வான் சாதாரண பிரெஞ்சுக்காரன் வால்டெயரின் நூல்கள் படிப்பதிலும் பார்க்க உவைன் குடிப்பதிலும் உற்சாகமடைவான்.

துப்பாக்கியிலிருந்து அதிகாரம் பிறக்கிறதென்று செஞ்சீனுவின் சிற்பி மாவோ சொல்லியிருந்தாலும் திராவிட மக்களாகிய எங்களுக்கு ''உண்டால் அம்ம இவ்வுலகம்,'' என்ற புறநானூறு கூறும் மகாவாக்கியத்துக்கு அதனை ஒப்பிடலாகாது.

இன்று அமெரிக்காவில் இருபது நிமிடத்திற்கு ஒரு கொலை நடக்கிறது இந்த ஊரில் எவ்வளவு சுலபமாக நாம் வாழைப்பழம் வாங்குமோ அங்கு அவ்வளவு இலகுவாசத் துப்பாக்கியை வாங்கலாம். விளையாட்டுத் துப்பாக்கிகளில் பயிற்சிபெறும் குழந்தைகள், படிக்கும்போதே இருக்கும் போதே உண்மைத்துப்பாக்கியை உபயோகிக்கின்றனர்.

துப்பாக்கி விற்பனை பிரசாரம் விசித்திரமானது. மகன் துப்பாக்கியால் தகப்பனைக்கொன்ற செய்தி பரவியபோதும் ''துப்பாக்கி மனிதனைக் கொல்வதில்லை. மனிதன்தான் மனிதனைக் கொல்கிறான்'' என்ற பகுத்தறிவுத்தத்துவம் பேசப்படுகிறது

ஐரோப்பாவில் கொலைவெறி அதிகரித்திருப்பதாக அக்காலத்தில் சொல்லப்பட்டது. உலக யுத்தங்களுக்கு ஐரோப்பாவே வரலாற்றில முதலிடம் வகித்து வந்தது. இன்று அந்தக் கௌரவம் அமெரிக்காவுக்கு கிடைக்கும் போல் தெரிகிறது.

பிரான்ஸ் நாட்டில் நடக்கும்கொலையை விட ஆறு மடங்கு கொலைகள் அமெரிக்காவில் நடப்பதாகச் சொல்லப்படுகிறது.

உலகனைத்திலும் தாமே முதலிடம் வகிக்கவேண்டுமென்ற பேரவா இன்றைய அமெரிக்க ஆட்சிக்கு இருப்பதை நாம்காணமுடிகிறது.

அரசன் எவ்வழி பிரஜைகள் அவ்வழி என்பதுபோல் அந்தச் சர்ச்சையையும் சச்சரவையும் ராணுவ பலத்தால் முறியடிக்கலாமென்ற நம்பிக்கை அண்மைக்காலத்தில் நடைபெற்ற போர்களிலும், அரசியல், குரோதங்களிலும் நாம் காணலாம்.

நிதிஉதவி மட்டுமல்ல இராணுவ பலத்தில் தமக்கு ஆதரவு தேடும் அமெரிக்கா பத்தனை வருடங்களாக மத்திய அமெரிக்காவில் ஈரானில், பிலிப்பைன்ஸில், மக்களைத் தோலிருக்க சுளை விழுங்கும் ஆட்சிகளுக்கு உதவி வந்தது.

உலக சமாதானத்துக்கும் நாடுகளின் நல்வாழ்வுக்கும் எள்ளளவும் உதவாத ராணுவ கொள்கையும், ஆயுதபலத்திமிரும் பண்பட்ட அமெரிக்க மக்கள் விரும்புவார்களென நாம் நம்பவில்லை.

இருப்பினும் இவ்வித போராடும் போக்கு- மண்ணில் நீரில், விண்ணில் அற்புத சாதனைகளை இயற்ற வல்ல கப்பல்களையும், ஆயுத தளபாடங்களையும் பெருவாரியாக உற்பத்தி செய்யத் தூண்டுகின்றது.

நாம் கவனிக்கவேண்டிய கருத்து ஒன்று இச்சந்தர்ப்பத்தில் குறுக்கிடுகின்றது.

அமெரிக்கரும் ஆங்கிலேயரும் ஏன் ஐரோப்பியநாடுகளும் தங்கள் போரையும், போருக்கு அத்திபாரமிடும் பகைமையையும், ஆசிய ஆபிரிக்க நாடுகளிலேயே வளர்ந்துவருகின்றனர்.

அரசியல் சாணக்கியத்தின் அற்புதம் அதுவென்றாலும் அதற்கு இடமளிக்கும் ஆசிய ஆபிரிக்க நாடுகள் இன்றும் நித்திரையில் இருப்பதனால் அது மன்னிக்க முடியாத தவறு.

பாரதத்தையும் - இலங்கையையும் பொறுத்தளவில் பயங்கரவாதம் இன்று தினசரி பேசப்படுவது எங்கள் பண்பாட்டுக்கு பெரும் இழுக்கென்பதை நாம் தாமதமின்றி உணரவேண்டும்.

இளைஞர் துப்பாக்கியில் நம்பிக்கை கொண்டிருப்பது தங்கள் பாரம்பரியத்துக்கு மட்டுமல்ல தேசியத்துக்கும் முரணான பயங்கரத்திருப்பம்.

தற்காலிகமான இந்த மாற்றம் மீண்டும் தமிழர் போற்றும் பண்பாகிய அன்பு கடமைக்கு திரும்பவேண்டும். என்பும் பிறர்க்குரியவரான நாம் இல்லறத்தில் நல்லறம் காணும் மக்கள். எனவேபகைமை பயிரிடுவதில் பங்குகொள்வது எங்ஙனம்?

# மணிவிழாக்காணும் வட்டு.
## திருஞானசம்பந்த வித்தியாசாலை

கல்வி மனிதனை முழுமையுள்ளவனுக்குகின்றது. கேடில் விழுச்செல்வம் கல்வி என்றார் வள்ளுவர் யாழ்நகரிலிருந்து எட்டு மைல் தொலைவில் அமைந்துள்ள கிராமம் வட்டுக்கோட்டை. கிராமங்கள் வளர்ச்சியடைய வேண்டுமானால் இரண்டு ஆலயங்கள் முக்கியமானவை. ஒன்று வழிபாட்டிற்குரிய ஆலயம் மற்றையது வித்தியாலயம். பாமர மக்களை மதமாற்றத்திற்காக மனமாற்றம் செய்வதற்கு கல்வியை ஓர் ஆயுதமாய் பாவித்தார்கள். அக்காலகட்டத்தில் விழிப்புணர்வுபெற்ற மக்களால் சைவமக்களின் கல்வியை மேன்நிலையடையச்செய்யவும். மக்களின் மதமாற்றத்தைத் தடுக்கவும் சேர் பொன். இராமநாதனவர்கள் தலைமையில் உருவாகியதுதான் சைவ வித்தியாவிருத்திச் சங்கம். இவர்களால் அதன் காரியதரிசியாயிருந்தவரும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவருமாகிய சட்டத்தரணி எம் எஸ். இராசரத்தினம் அவர்களால் ஆரம்பித்த பாடசாலையே வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தவித்தியாசாலை.

**சி. சபாநாதன்**

இது 1926ம் ஆண்டு ஆரம்பித்து அறுபது ஆண்டுகளில் எத்தனையோ மாணவர்கட்கு கல்விச் செல்வத்தை வழங்கி வித்துவமேதைகளையும் கலைஞர்களையும், தொழில் நுட்ப வல்லுனர்களையும்; உருவாக்கியுள்ளது.

வட்டுக்கோட்டையில் காத்திச்சட்டம்பியார், சின்னத்துரைச் சட்டப்பியார், சுப்பிரமணிய வித்தியாசாலை போன்றவையும் தொடர்ந்து ஆரம்பமான பாடசாலைகளாகும் இவற்றை மக்கள் திண்ணைப்பள்ளி, சைவப்பள்ளிஎன அழைத்துவந்தனர்.

தரமான ஓர் பாடசாலையென மக்கள் மத்தியில் நன்மதிப்பைப்பெற்ற திருஞானசம்பந்த வித்தியாசாலை வட்டுக்கோட்டைச் சந்தியிலிருந்து சொற்பதொலைவில் திண்ணைப் பாடசாலையாய் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினல் நிர்வகிக்கப்பட்டுவந்து பின் வித்தியாபகுதியால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையாய் மாறியது

ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்புவரை தானிருந்தது. பின்பு இங்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களால் கவர்ந்திழுக்கப்பட்ட மக்கள் தங்கள் பிள்ளைகளை இப்பாடசாலையில் சேர்க்கத்தொடங்கினர். 61ம் ஆண்டின் பின்னர் எட்டாம் வகுப்பு ஒன்பதாம் வகுப்பென வளர்ச்சியடைந்து மாணவர் தொகைக்கேற்ப கட்டிடங்கள் விஸ்தரித்தும் இடம்போதாநிலை தோன்றியது இதையுணர்ந்த அவ்வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தினர் நவாலி சங்கரத்தை வீதியில் வட்டுக்கோட்டை கிராமச் சபையின் விளையாட்டரங்கின் முன்னுள்ளவெற்றுக்காணியை சுவீகரித்தனர். இக்காணியை சுவீகரிப்பதற்கு முன்னின்றுழைத்த பெரியார் ஆ சங்கரப்பிள்ளை ஜே. பி. அவர்களை இப்பாடசாலை என்றென்றும் வாழ்த்தும் பின்பு அரசாங்கத்தினல் ஒதுக்கீடு செய்த நிதியுதவிகளைக் கொண்டு அருகில் உள்ள வெங்காயச் சங்கக் கட்டிடத்தை வாங்கியதோடு புதிய கட்டிடங்களை கட்ட ஆரம்பித்தது. தற்போது இரண்டு புதிய கட்டிடங்களையும் அதனுள் ஒன்று மாடிக் கட்டிடமாயும் அமைந்துளது. தற்போது மாணவர்களின் இடநெருக்கடிப் பிரச்சினை தீர்ந்துள்ளது. ஊர்மக்களின் உதவியோடு ஊருணி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது மணிவிழாக்காணும் இவ்வேளையில் இப்பாடசாலையை மக்கள் மத்தியில் மதிப்பைப்பெறக்கூடியவகையில் நிர்வகித்து ஒய்வுபெற்றுள்ள ஆசிரியர் க சுப்பிரமணியம் அவர்களையும் அண்மையில் மறைந்த ஆசிரியர் இராசரட்ணம் அவர்களையும் என்றென்றும் மறக்க முடியாது. இப்பொன்னான சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையின் அதிபராகிய சிவவாகீசர் அவர்களும் அபிவிருத்திச் சங்கத்தாரும், விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை நிறுவுதல், மணிவிழாவைக் கொண்டாடுதல், மலர் வெளியீடு போன்றவற்றிற்கு சைவசமயிகள் பழைய மாணவர்கள், வள்ளல்கள் போன்றோரிடம் உதவிகளும் கிடைத்தவண்ணமுள்ளனர். மணிவிழாச் சிறப்புற இறையருளும். குருவருளும் கிடைக்கவென பிரார்த்திப்போமாக.

# மக்கள் கருத்து

## சைவ அபிமானிகள் பாராட்டு

சர்க்கஸ் கலைஞன் கயிற்றில் நடந்தும் சாகஸங்கள் பல செய்தும் பார்வையாளர்கள் பாராட்டைப் பெறுவது போலப் பலதரப்பட்ட சைவ அபிமானிகளது பாராட்டுக்கு உரிய விதத்தில் கடைத்தெரு வேம்படி விநாயகர் ஆலய திருவிழா நடைபெறுகின்றது முற்காலத்தில் சுற்றிலும் அக்கினி மூட்டி நடுவில் நின்றும் நீரில் நின்றும் தவம் செய்த கதைகளை நினைவூட்டும் வகையிலேயே பாதுகாப்பு வலய எல்லைக்குள் பிரதான வீதிகளில் உலாவரும் கடைத்தெரு வேம்படி விநாயகர் பக்தர்களும் உபாகாரர்சமூம் திருவிழா நடாத்துகின்றனர்.

பிரபலமடைந்துள்ள பெரிய தேவஸ்த்தான விழாக்கள் நாட்டு நிலைமையை அநுசரித்து இரகசியமாக நடைபெறும் போது இவ்வாலயவிழா இப்படிநடைபெறுவது எத்தகைய கெடுபிடிகள் மத்தியிலும் நற்செயல்கள் தடங்கலின்றி நடைபெற முடியும் என்னும் கருத்தை உணர்த்துகிறது போலும்.

சமண ஆதிக்கம் பாண்டி நாட்டில் அதிகாரம் செலுத்தியபோது மங்கையக்கரசியார் குலச்சிறையாரென்ற இவருமே சைவசமயிகளாயிருந்து பின் சைவம் வளரக் காரணமாயினர் என்ற வரலாறு போன்று இப்போதும் ஒரு சிலர் இருந்தே நம்சமூகத்தை மேன்மைப்படுத்த முடியும் என்பதற்கு இவ்விழா நல்ல சான்றாகும்.

சி. கிருஷ்ணமூர்த்தி
நல்லூர்.

## பாலர் பாடசாலை
(சாவகச்சேரி)

கைதடிப் பகுதியில் இருக்கின்ற மிகவும் பின்தங்கிய கிராமமான கள்ளிநகரில் அறவழிப்போராட்டக்குழு, பாலர் பாடசாலை ஒன்றினை அண்மையில் ஆரம்பித்துவைத்துள்ளதுடன் மேலும் அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கும் அறவழிப் போராட்டக்குழு முன்வந்துள்ளது.

## மினி சினிமாக்கள்:
## "மாணவரின் கல்வி வளர்ச்சியை பாதிக்கின்றன"
(யாழ்ப்பாணம்)

''தேசிய இனநெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இன்றைய காலகட்டத்திலே தமிழ்மக்களை தேசிய உணர்வுகளிலிருந்து மழுங்கடிக்கத் தக்கவகையிலான மினி சினிமாக்களும், தனியார் ஒளி பரப்புகளும் எமது பிரதேசத்தில் அண்மைக்காலத்தில் அதிகரித்து வருவதானது மிகவும் கவலை தருவதாக உள்ளது'' இவ்வாறு காவலூர் இலக்கிய வட்டம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

ஊர்காவற்றுறை காவலூர் இலக்கியவட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''கலாசார சீரழிவுகளை ஏகாதிபத்திய நாடுகளால்வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு மூன்றாம் உலக நாடுகளில் திணிக்கப்பட்டு அதன்மூலம் அந்நாடுகள் பிற்போக்கான நிலைமைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளமை கடந்தகால வரலாறுகளின்மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. எனவே இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான நிகழ்ச்சிகள் எமது தேசிய, கலை, கலாசாரத்தைப் பாதிப்பதுடன் மக்களை தேசிய விடுதலை உணர்வுகளிலிருந்து அந்நியப்படுத்தி மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும்

[4ம் பக்கம் பார்க்க]

### இன்று
# 'ஹோமியோபதி'யின் தந்தை ஹானிமனின் பிறந்த தினம்

ஹோமியோபதி என்பது ஓர் உயர்ந்த ஜெர்மன் தேசத்து வைத்திய முறை இவற்றை 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் ஹானிமன் என்னும் ஜெர்மன் தேசத்தவர் கண்டுபிடித்தார் இதற்குமுன் டாக்டர் சாமுவேல் ஹனிமன் ஓர் உயர்ந்த பட்டம்பெற்ற அலோபதி டாக்டராவார்.

**டாக்டர்**
**எம். வி. தில்லைசந்திரன்**

இவர் தொழில்புரியும்காலத்தில் இவருக்கு மனநிம்மதி ஏற்படவில்லை அதனால் தொழிலை நிறுத்திவிட்டு ஆராய்ச்சிகள் செய்தார். அதன்பலனாக ஹோமியோபதி என்ற ஜெர்மன் வைத்திய முறையைக் கண்டறிந்தார். இவரால் அணுவின் சக்தியெல்லாம் ஆராயப்பட்டு மனித உலகத்திற்கு ஆக்கமுறையில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

ஆரோக்கியமுள்ள சரீரத்தில் சோதனைகள் செய்து அதனால் ஏற்படும் விளைவுகளை அறிய வேண்டுமென்ற ஆவலினால் 'கொய்னா'வைத்தானே அதிகம் உட்கொண்டார். அதனால் ஆரோக்கியமான அவருக்கு மலேரியா சுரம் கண்டது. இதிலிருந்து ஒரு குறிப்பிட்ட வியாதிக்கு ஏற்ற மருந்தை வியாதியில்லாதவர் உட்கொண்டால் அம்மருந்து அவ்வியாதியை உண்டாக்கும் என அறிந்தார் அம்மருந்தை சிறிய அளவில் கொடுக்கப்பட்டால் வியாதியை அறவே போக்கடித்துவிடும் என்னும் ஹோமியோபதியின் தத்துவத்தை உலகறியச் செய்தார்.

## யாழ். தொழில்நுட்பக் கல்லூரி:
# மாணவர் பற்றுக்குறையால் மூடப்படும் அபாயநிலை?

(உடுவில்)

''யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் தொழில் நுட்பப் பயிற்சி பெறுவதற்குப் போதியளவு மாணவர்கள் இன்மையால் பல பயிற்சிநெறிகளை மூடவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது. இது தமிழ் இனத்திற்குப் பெருநஷ்டத்தையே கொடுக்கும்.''

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்சயன் தலைமையில் நடைபெற்ற மானிப்பாய் வட்டாரப் பாடசாலை அதிபர்கள் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு இ. இராசேந்திரா இவ்வாறு கூறினார்,

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இராசேந்திரா மேலும் பேசுகையில்; ''யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரிக்கென உலக வங்கியின் ஆதரவுடன் 650 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியை எமது பிள்ளைகள் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும். பாடசாலையைவிட்டு விலகும் மாணவர்கள் வேறு திசைகளில் மனதைச் செல்லவிடாது தொழில் நுட்பக் கல்வி பெறுவதற்கான ஆலோசனைகளைப் பாடசாலைகள் மூலம் வலியுறுத்தப்படவேண்டும்'' என்றார்.

விஞ்ஞானபாட வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். நடராசா உரையாற்றுகையில்; ''மாணவர்களின் கல்வி வளர்ச்சியையொட்டியதான கல்விப் பொருட்காட்சியொன்றை 2ம் தவணையில் நடாத்தவும் புதிர் போட்டிகளை நடாத்தவும் சகல பாடசாலைகளும் ஒழுங்கு செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்-

---

## கல்விபயிலும் மாணவிகள்:
# ''அருகிலுள்ளபாடசாலையை தேர்ந்தெடுத்தல் நன்று''

(யாழ்ப்பாணம்)

''கொக்குவில் கிராமத்திற்கு ஓர் சிறந்த மகளிர் கல்லூரியாக இப்பாடசாலை திகழ வேண்டும் என்பதே எமது குறிக்கோள். கஷ்டமான சூழ்நிலையிலும் மாணவிகள் நகரத்திலிருக்கும் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். இவர்கள் வீடு திரும்பும்வரை ஏக்கத்துடன் பெற்றோர் காத்திருக்கின்றனர், மாணவிகள் அண்மையில் உள்ள பாடசாலையில் கல்வி கற்றால் இந்நிலை ஏற்படத் தேவையில்லை. ஆசிரியர்களிலும், பாடசாலையிலும் நம்பிக்கை வைத்து, பெற்றோர் துணிவுடன் தமது பிள்ளைகளை இப்பாடசாலைக்கு அனுப்ப வேண்டும்''

இவ்வாறு ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர்கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த யாழ். மாவட்டக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பேசுகையில் கூறினார்.

வித்தியாலய அதிபர் திருமதி செல்வநாயகி நவரத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற மேற்படி பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி கலந்து கொண்டார்.

கல்லூரி அதிபர் தமதுரையில் ஏனைய ஆண்டுகளிலும் விட இவ்வாண்டு மாணவர் அனுமதி அதிகரித்துள்ளமை பற்றி எடுத்துரைத்தார். பரிசில்கள் வாங்குவதற்கு பணம் வேண்டுமென்று கேட்டவுடன் மனமுவந்து கொடுத்த அனைவருக்கும் நன்றிதெரிவித்தார்

திரு. சு. சிவநாய மூர்த்தி தமதுரையில்,'' போதியகாணி வசதி உள்ள இப்பாடசாலை சிறந்த ஒரு பெண்கள் கல்வி நிலையமாக மாறவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டதுடன் இப்படியான ஒரு கஷ்டமான சூழலிலும் மாணவர்களுக்கு நிகழ்ச்சிகளைப் பயிற்றுவித்து ஏனைய ஒழுங்குகளையும் செய்து விழாவைச்சிறந்த முறையில் நிகழ்த்தியமைக்கு ஆசிரியர்களைப் பாராட்டினார்.

மாணவ தலைவி செல்வி அன்ரற் பாமலா பாலச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினர் மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

# ''ஆங்கில அறிவுத்திறனை வளர்க்க ஆங்கிலப்போட்டி அவசியம்''

(யாழ்ப்பாணம்)

''அறிவுடன் பிள்ளைகளின் ஆன்மீகப்பண்புகளையும் வளர்த்து வருங்கால நல்வாழ்விற்கு அத்திவாரமாக அமைவது ஆரம்பப்பாடசாலைக் கல்வியாகும் எண்ணிய முடிதல் வேண்டும் என்ற பாரதி நல்லவே எண்ணல் வேண்டும் என்று கூறியுள்ளார். நினைப்பதெல்லாம் சரி என்று செயற்படாமல்நல்லவற்றை நினைத்து நற்செயல்களைச் செய்ய சிறுவயதிலேயே பிள்ளைகள் பழகிக்கொள்ளவேண்டும். பரீட்சைக்கு மாணவர்களைத் தயாரித்தலே ஆசிரியர்களின் கடமை என நினையாது பண்புள்ள நல்லவர்களை உருவாக்குவதற்கேற்ற வகையில் ஆசிரியர்கள் தொழிற்படவேண்டும் எமது சமுதாயம் எந்த அளவிற்கு தாய் மொழியாகிய தமிழை நேசிக்கிறதோ அந்த அளவிற்கு ஆங்கிலத்தையும் நேசிக்கிறது. ஆங்கில அறிவையும் திறனையும் வளர்க்க ஆங்கிலப் போட்டிகள் உதவுகின்றன.''

இவ்வாறு வண்ணை இளைய தம்பி வித்தியாலய ஆங்கில விழாவில் முதன்மை விருந்தினராகக்கலந்து கொண்ட யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உதவிச்செயலாளர் திரு. எஸ். பத்மநாதன் பேசுகையில் கூறினர், மேலும் அவர் தமதுரையில், ''இப்பாடசாலையின் கட்டிடத் தேவைபற்றி அரசாங்க அதிபர் திரு வை. மு. பஞ்சலிங்கத்துடன் தொடர்பு கொண்டு உதவிசெய்ய முயற்சிப்பேன்'' என்றார்.

ஆங்கில தினப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு.சிவநாயகமூர்த்தி பரிசுகளை வழங்கினர். வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மில்க்வைற் அதிபர் க. கனகராசா ஆசிரியர் க. சிவகுரு ஆகியோர் சிறப்புரை வழங்கினர்கள் செல்வி. இ. யோகராணி நன்றியுரையாற்றினர்.

---

# 'தொழில்நுட்பக் கல்விமூலம் தொழில்வாய்ப்பு பெறலாம்'

(உடுவில்)

''பல்கலைக்கழகக் கல்வியை விட தொழில் நுட்பக் கல்வி எந்தவகையிலும் குறைந்ததல்ல. பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்து தமது அறிவை வளர்ப்பதன் மூலம் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.''

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை உயர்தர மாணவர் மன்றத்தின் 6-வது வருடாந்த மதிய போசன விருந்தில் பிரதம விருந்தினராகச் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கூறினர்.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விருந்துவிழாவுக்கு செல்வன் சி. ஜெயக்குமார் தலைமை வகித்தார்.

விருந்தினர்களை வரவேற்று உரையாற்றிய பாடசாலை அதிபர் திரு. வி பொன்னுத்துரை, ''பதவி உயர்வுகள் எவ்வளவு கிடைப்பினும் தன் நிலை தவறாது வாழ்ந்து நாட்டுக்காகச் சேவையாற்றவேண்டும் என்பதை எமது கல்விப் பணிப்பாளரை உதாரணமாகக் கொண்டு ஒவ்வொருமாணவனும் ஒழுகவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்,

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ்,வி மகேஸ்வரன். கம்பன் கழக உறுப்பினர் திரு என். கணேசமூர்த்தி, திரு, டபிள்யூ ஜீ, அன்னப்பா, செல்வன் டொமினிக். ரவீந்திரராஜா, செல்வன் எஸ். கற்குணநாதன் ஆகியோரும் உரையாற்றினர். செல்வி சீ. நளினி நன்றி கூறினர்.

---

## விளையாட்டுப் போட்டி

[சாவகச்சேரி]

கைதடி நவபுரம் சனசமூக நிலையத்தின் 21-வது நிறைவு விழாவையொட்டி. நிலையம், விளையாட்டுப் போட்டியொன்றினை விரைவில் நடாத்தவுள்ளது.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள ஐவர் கொண்ட குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

## மினி சினிமாக்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுக்க மனோபாவங்களையும் பாதிப்பதாகவுள்ளது.

எனவே எமது பிரதேசத்தில் உள்ள 'மினிசினிமா' உரிமையாளர்களும் தனியார் ஒளிபரப்பாளர்களும் இவிற்றினைக் கருத்திற் கொண்டு எமது கலை, கலாசாரத்தைப் பாதிக்காதவகையில் தமிழ் மக்களுடைய சிறப்பான எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு செம்மையான கலாசார வளர்ச்சிக்கு ஏற்றவகையில் தமது நடவடிக்கைகளை ஒழுங்கமைக்குமாறு மிகவும் வினயமுடன் கேட்டுக் கொள்கிறோம்.'' (ஐ)

---

## 13 அகதிக் குடும்பங்களுக்கு ஆனைவிழுந்தான் குடியேற்றத்தில் புனர்வாழ்வு நடவடிக்கை

[கே. வி. கே. திருலோகமூர்த்தி)

முல்லைத்தீவில் தஞ்சமடைந்திருந்த 13 அகதிக்குடும்பங்கள் கிளிநொச்சியில் உள்ள ஆனைவிழுந்தான் குடியேற்றத்திட்டத்தில் குடியமர்த்தி புனர்வாழ்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1983ம் ஆண்டு ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்டு முல்லைத்தீவில்இப்பதின் மூன்று குடும்பங்களும தஞ்சமடைந்திருந்தன இவர்களுக்கு சமூக சேவைப்பகுதியினரும் வண. பிதா ம. ஈ பயஸ் அடிகளாரும் இதுவரை நிவாரண உதவி வழங்கி வந்தனர்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தேவசிகாமணி, கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் கே. முருகவேள் ஆகியோர் எடுத்த நடவடிக்கையைத்தொடர்ந்து ஆனைவிழுந்தான் அகதிகள் குடியேற்றத் திட்டத்தில் இக்குடும்பங்கள் குடியமர்த்தப்பட உள்ளன.

இதற்கான துரித நடவடிக்கைகளில் ஆனைவிழுந்தான் குடியேற்ற அதிகாரி கு ஞானசேகரம் ஈடுபட்டுள்ளார். இன்னும் சில தினங்களில் இப்பதின்மூன்று குடும்பங்களும் ஆனைவிழுந்தானிற்கு கொண்டுவரப்பட உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்குடியேற்றத் திட்டத்தில் 1983ம் ஆண்டு ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சியில் தஞ்சமடைந்திருந்த மாத்தளை, எல்பிட்டி முதலான பகுதிகளைச் சேர்ந்த 180 குடும்பங்கள் ஏற்கனவே குடியமர்த்தப்பட்டுள்ளன.

---

# ''தேவையாலேயே தத்துவம் சிந்திக்கப்பட்டது''

(மலாக்கா)

''நமது தேவைகளில் சமயத் தேவையே மிகமுக்கியமானது. இதனை முதன் முதலில் கண்டு பிடித்த விஞ்ஞானிகளே நமது மெஞ்ஞானிகள். தத்துவ தரிசனததிற்கு முன்பே தேவையின் தரிசனம் கிடைத்தது. தேவையின் தரிசனத்தினாலேயே தத்துவ தரிசனமும் சித்தித்தது''

இவ்வாறு புலவர் ஈழத்துச் சிவானந்தன் மலேசியாவில் மலாக்கா மாநிலம் தம்பின் தையல்நாயகி சமேத வைத்தீஸ்வரப்பெருமான் ஆலய மகாகும்பாபிஷேகத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அதிபர் இராஜ மாணிக்கனர் தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சியில் புலவர் நான்கு நாட்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர். கும்பாபிஷேகத்தன்று நிறைவு நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசுகையில்; ''பாரொடு விண்ணாய் பரந்திருந்த நமது தேவையை அருவமாய் அருஉருவமாய் உருவமாய் படிமுறை நிலையில் கண்காட்டிய நமது சான்றோர்கள் சரித்திர நாயகர்கள் ஆவார்கள். பரம்பொருளோடு பாசநேசமுடன் பக்தி நிலையில் மனம்கலந்து உறவுவைத்துக் கொள்ளவேண்டும். இறைவனொடுகொண்ட இறுக்கமான உறவின் காரணமாகவே இறைவனை அவன், அவள், நீ, உன்னுடைய என்ற உரிமைப் பதங்களால் நம்மவர்கள் அழைத்தார்கள் நெருக்கமானவர்களை, நீ உன்னுடையஎன்று சுட்டுவதும்போல இறைவனையும் சுட்டி அழைத்துள்ளார்கள். வனாகி, மணணாகி, காற்றாகி ஒளியாகி நிற்கும் பரம்பொருள் கிரிகைகளாலும் மந்திரங்களாலும் செப்புச்சிலைகளிலும் கற்சிலைகளிலும் எழுந்தருளி அருள்செய்யத்தொடங்கும் திருநாளே கும்பாபிஷேகப்பெருநாள்'' என்றார் சிவபெருமானுடைய ஐந்து தொழில்களும் நமது தேவை குறித்தேநிகழ்கின்றன தேவையில்லாத செயல்களில் நமது பரம்பொருள் ஈடுபடுவதில்லை. என்று கூறிய அவர் ''திருக்கோயில் வழிபாடு. திருஉருவ வழிபாடு அடியார் ஒழுக்கம் முதலியவை குறித்து யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் பெருமான் எழுதியுள்ள சைவ வினாவிடைகள் பாலபாடம் முதலியவை நமக்கு வழிகாட்டியாய் உள்ளன'' என்றார்.

கோ. சி. பாலன்,
மலாக்கா.

---

## 1500 கடவுச்சீட்டு விண்ணப்பம்!

[சுண்டுக்குளி]

யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் தொடககம் மார்ச் மாதம்வரை சுமார் 1500 விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இவை வாரத்தில்இரு தடவைகளாக கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் அங்கு நன்கு பரிசீலனை செய்யப்பட்டபின் சரியான விண்ணப்பங்களுக்கு கடவுச்சீட்டுகள் ஒரு மாதத்தில் வழங்கக்கூடியதாக கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்போது மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்பவர்களே அதிகமாக கடவுச் சீட்டுக்களுக்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.

---

## பொதுக்கூட்டம்

[புலோலி]

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் வருடாந்தப்பொதுக்கூட்டம் அண்மையில் பருத்தித்துறை சிவன்கோவில் கலாமண்டபத்தில் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

---

## வருடாந்த உற்சவம்

[பண்டத்தரிப்பு]

பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 15ம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 24ம் திகதியன்று தேர்உற்சவமும், அன்றையதினம் பிற்பகல் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

---

## ஓராண்டு பூர்த்தி விழா

[புலோலி]

புலோலி தெற்கு இணக்க சபையின் ஓராண்டுப் பூர்த்தி விழா எதிர்வரும் 19 ம் திகதி சனிக்கிழமை புலோலி மெதடிஸ்சு மிஷன் தமிழ கலவன் பாடசாலையில் இணக்க சபைத் தலைவர் எஸ். தங்கத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிலே கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இதற்கான சகல ஒழுங்குகளையும் கிராமசேவை அலுவலர் எஸ் வேலாயுதபிள்ளை மேற்கொண்டுள்ளார்.

# ஆயுர்வேதக் கல்லூரி மறியல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கள் பெற்ருேர், நலன்விரும்பிகள் பழைய மாணவர் ஆகியோர் கூடிப் பேச்சவார்த்தை நடத்திஞர்கள். சுமார் 4 மணி நேரம் நடந்த இப்பேச்சுவார்த்தையில் சுமுகமான முடிவு ஏற்பட்டது.

பிற்பகல் 3 மணிக்கு முடிவு அறிவிக்கப்பட்டதும் மாணவர்கள் மறியலைக் கைவிட்டு கல்லூரிச் கதவுகளைத் திறந்து விட்டனர்.

உபதலைவர் டாக்டர் சி. வேலும்மயிலும் தலைமையில் நடந்த கல்லூரி இயக்குநர் சபைக்கூட்டத்தில் மாணவர் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டுச்கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

''மாணவர் அவையின் கோரிக்கைப்படி ஆயுர்வேத ஆணையாளரின் அனுமதி பெற்றுப் பரீட்சை" நடத்துவது. அதுவரை காலவரையறையின்றிப் பரீட்சையை ஒத்தி வைப்பது'.

''இது நிறைவேருத பட்சத்தில் யாழ்.பல்கலைக்கழக சித்த வைத்திய பிரிவுடன்தொடர்பு கொண்டு பரீட்சையை நடத்துவது.

''இதுவும் சாத்தியப்படாவிட்டால் வடஇலங்கைசுதேச வைத்திய சபையின் பரீட்சையை அங்கீகரிக்குமாறு அரசைக் கேட்பது.

''1983 முதல் 1985ம்ஆண்டு வரை பட்டம் பெற்றுப் பதிவு இல்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்குப் பதிவு பெற்றுக் கொடுக்க முயற்சிப்பது''.

பரீட்சை நடத்துமாறு நூனசித்தி மாணவர் விடுத்த கோரிக்கை பற்றி ஆலோசிக்கப்பட்டது. தற்போதுள்ள சூழ்நிலையில் பரீட்சையை உடன் நடத்தமுடியாதிருப்பதால் மூன்றுமாதங்களின் பின் அவர்கள் கோரிக்கையைநிறைவேற்றிவைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. (க)

## கடைசிநேர வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 84 ஸ்ரீ 6723 Bajaj ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜெ. ஜெகதீசன், 4/131, பருத்தித்துறை விதி, நல்லூர், யாழ்ப்பாணம். அல்லது வீரமாகாளி அம்மன் கோவிலடி, சந்திரன் கராச். (C1689)

### கல்வி

டென்மார்க்— 104 Folk Schools, விவசாய, விஞ்ஞான, இளைஞர் பாடசாலைகள்- பல்கலைக்கழகங்கள்- புலமைப் பரிசில்- $17\frac{1}{2}$ வயதுக்கு மேற்பட்ட எவரும்- குறுகிய கால, நீண்டகால (3-32 கிழமை) பயிற்சி நெறிகள்- தகவல்கள் நேரில். காலை 7-9 மணி, தபாலில்பெற 20/- முத்திரையுடனும், முத்திரை ஒட்டிய சவருடனும் விண்ணப்பிக்க;- Development Information Scrvice, 'மாணிக்கராச கிரி', முத்தெட்டுமடலேன், கோண்டாவில் மேற்கு. (A 1696)

### தவறிவிட்டது

9- 4- 86 கொழும்பிலிருந்து வந்த S?fety பஸ்சில் கறுப்பு நிறமுடைய பயணப்பை (Kit Bag) சாமான்களுடன் தவறிவிட்டது. இதனைக் கைமாறி எடுத்தவர்கள் அல்லது இதனைக் கண்டவர்கள் தயவு செய்து ஆறுகால் மடத்தடி (ஆனைக்கோட்டை) பேக்கரியில் கொடுக்சவும் தகவல் தெரிந்தோர் திருமதி கா. மயில்வாகனம், 'ரஜிபவனம்,' ஆறுகால்மடம், ஆனைக் கோட்டை எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (C 1693)



**எம்பயர் திரையில்**
10-30 2-30, 6-30. 9-15
கமல் - ஊர்வசி
**அந்த ஒரு நிமிடம்**

**LIDO Jaffna**
10-30, 2-30, 6-30
நாகேஷ்-மனோரமா-சோ
V. K. ராமசாமி
நடித்த
**ஆலயம்**

5வது வாரம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)


## 41-ம் நாள் நினைவு அஞ்சலி



**கேதுராசா செல்வராசா**

மலர்வு: 17-07-1964
உதிர்வு: 25-02-1986

அகாலமாக மரணமான உனது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறேம்.

பெற்ருேர்,
சகோதரர்கள்,
உறவினர்.

83-A திருநகர்.
C-1697

உ

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**K. A. இராமலிங்கம்**

(நகைக்கடை - உரிமையாளர், புங்குடுதீவு)

அன்னை மடியில்:
11-09-1911
இறைவனடியில்:
23-03-1985

எம்மையெல்லாம் சிறப்பாக வாழவைத்து விட்டு நீர் மட்டும் திடீர் என்று விலகி இறைபதம் அடைந்து இன்றுடன் ஒரு வருடம் ஆகியும் அன்னுரை இன்று நினைவு கூறுகிறேம. என் அன்புத்தெய்வமே! உமது ஆத்மா சாந்தியடையட்டும்.

இங்ஙனம்,
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

நல்லூர்,
யாழ்ப்பாணம்.
C - 1687

## வருடாந்த உற்சவம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று 10 ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

20 ந் திகதி ஞாயிற்றுக் கிழமை வசந்தோற்சவமும், புதன்கிழமை ரதோற்சவமும், 24 ந் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

நாட்டின் சீரற்ற சூழ்நிலை காரணமாக பகல் திருவிழாக்கள் காலை 10 மணிக்குள்ளும் இரவு திருவிழாக்கள் இரவு 7 மணிக்கு முன்னதாகவும் முடிவடையும் என்று அறிவிக்கப்யட்டுள்ளன.

வல்வை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு ஞானதேசிகபானு ஸ்ரீல ஸ்ரீ தண்டபாணிக தேசிகர் உற்சவங்சளை நடத்துவார்.


## வாடிக்கையாளருக்கு ஓர் அறிவித்தல்

'யூனியன் ரஸ்ட் அன்ட் இன்வெஸ்மென்ட் லிமிட்டெட்'

மீண்டும் விரைவில் தமது பணிகளை தொடரவுள்ளது. அதேவேளை வைப்பில் இட்டோருக்கான பணவட்டி வீதம் கொழும்பில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**யூனியன் ரஸ்ட் அன்ட் இன்வெஸ்மென்ட் லிமிட்டெட்**
347, எட்டியாராய்ச்சி கட்டிடம்
யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.
A-568


# விளையாட்டு வினையானது: சிறுவர்கள் தப்பினர்!

(யாழ்ப்பாணம்]

விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த சின்னஞ்சிறுசுகள், வானத்தில் மெதுவாகப் பறந்துகொண்டிருந்த ஹெலிகொப்டரை நோக்கி விளையாட்டுக்காட்டினராம்.

இவ்விளையாட்டுச் செயலால் வானுயரப் பறந்த ஹெலிகொப்டர் திடீரென வட்டமிட்டுத்தாழப்பறந்துதரையை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிவேட்டுகளைத் தீர்த்தது. செய்வாதீனமாக அந்தச்சின்னஞ்சிறுசுகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை, அவர்கள் அவ்விடத்திலிருந்து ஓடி ஆலயமொன்றுள் தஞ்சம் புகுந்தனராம்.

இருபாலையிலுள்ள விளையாட்டு மைதானத்தில் இத்தாக்குதல் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம்செய்த சமயம், அவ்விடத்துக்கு அருகாமையிலுள்ள வீதி ஓரத்தில் நின்ற வான் ஒன்றும் சூட்டுக்கிலக்கானது. இதனுல் வானின் பின்பக்கம் பலத்தசேதமடைந்தது. [மா]

## இடுப்பிலிருந்து விழுந்தது குண்டு: பொலிசும் நபரும் காயம்

(கொழும்பு)

பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்குக் கொண்டு சென்றநபரின் இடுப்பிலிருந்து விழுந்த குண்டொன்று வெடித்ததால் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் வேறிருவரும் அந்த நபரும் பலத்தகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை தெமட்டக்கொட பொலிஸ் நிலையத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த நால்வரும் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ய-மா)

## நல்லூரில் இன்று

(யாழ்ப்பாணம்)

யோகசுவாமிகளின் குருவான செல்லப்ப சுவாமிகளின் மகாசமாதி தினம் இன்ருகும்.

இத்தினத்தையிட்டு நல்லூரில் சுவாமிகளின் சமாதியில் வழிபாடு நடைபெற்று 63 நாயன்மார் மண்டபத்தில் அன்னதானமும் வழங்கப்படும்.

## நீதி செத்த...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

''இலங்கையின் இனப்பிரச்னையைத் தேசிய சர்வதேசிய ரீதியிலேயே இந்திய அரசு அணுக வேண்டும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக ஈவிரக்கமின்றி நடாத்தப்படும் தாக்குதல்கள் நிச்சயம்கண்டிக்கப்படவேண்டியவை.''

இலங்கை அரசு தனது ஆயுதப்படைகளின் பலத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு வெளிநாடுகளின் உதவிகளைப் பெறுவது பற்றிப் பிரஸ்தாபிக்கையில் முதலமைச்சர் திரு. ராமச்சந்திரன் கூறியதாவது:

''தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இலங்கைஅரசு பாகிஸ்தானின் இராணுவ உதவியைப்பெறுவது மட்டுமன்றி, பாகிஸ்தானிய இராணுவ ஆளணிகளையும் பயன்படுத்தி வருகிறது. அண்மையில் ஒரு பாகிஸ்தானிய 'பைலட்' விமான விபத்தொன்றில் இலங்கையில் மரணித்ததும் ஈங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு புறத்தில் இந்தியாவிடம் சமாதானக்கொடியைக் காட்டிக்கொண்டு, மறுபுறத்தில் பாகிஸ்தான், தென்னுபிரிக்கா, இஸ்ரேல்முதலான நாடுகளிடமிருந்து இராணுவ ரீதியிலான உதவிகளைப்பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது''.

''பயங்கரவாதிகளை ஒழிப்பதென்ற போர்வையில் அப்பாவி ஈழத்தமிழர் மீது நடாத்தப்படும் கொலை நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்குமாறும் தமிழ்நாடு முதலமைச்சர் இக்கருத்தரங்கில் இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தியிடம் வேண்டுகோள் விடுத்தார்.


# விக்னு டியூசன் சென்ரர்

ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**A/L 88** கலை, வர்த்தக, விஞ்ஞானம்
ஆரம்பம் 19-4-1986
மாலை 1.00

கலை, வர்த்தக, தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு:-

| | | | |
|---|---|---|---|
| பொருளியல்: | திரு. கிருஷ்ணனந்தன் | தமிழ்: | திரு.குழந்தை |
| வர்த்தகம்: | திரு. லங்கா | புவியியல்: | திரு. குணராஜா |
| கணக்கியல்: | திரு. வன்னியசிங்கம் | இந்துநாகரிகம்: | திரு சர்மா |
| அளவையியல்: | திரு. சுப்ரமணியம் | அரசியல்: | திரு. மஃறூவ் |

தூய, பிரயோக கணிதம்: திரு. தயாபரன் B.Sc. [ஆரம்பம் மாலை 3.00 மணி]

A/L 87—
Pure Maths — Calculas
Applied Maths — Dynamics

மு.குறிப்பு
★ தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடாத்தும் ஒரே ஒரு நிறுவனம்.
★ 88ம் ஆண்டுக்கு பரீட்சைக்கு தோற்றுவிக்கும் மாணவர்கள் 19ம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். (A430)

# புலிகளுடன் செய்யப்படும் ஒப்பந்தத்தை ஏற்போம்!

## — கருணாநிதி

சென்னை, ஏப். 8

''தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கை அரசுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்துககு ஆதரவளிக்கத் தயாராகவுள்ளேன்?' என்று திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திரு கருணாநிதி தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பின் தலைவராகவும் இருந்துவருகிறார் இந்த அமைப்பின் சார்பில் மதுரையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அவர் நேற்றுப் பேசியபோதேமேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. கருணாநிதி; ''தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் அந்நாட்டின் இனப்பிரச்னைக்கான தீர்வு காணும்வகையில் ஒப்பந்த மொன்றைச் செய்துகொள்ள முன்வருமேயானால் அவ்வொப்பந்தத்தை தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு ஏற்றுக்கொள்ளும்'' என்றார்.

இத்தவேளை தி, மு. க விரைவில் இந்தியஎதிர்க்கட்சிகள்ன் கூட்டமொன்றையும் கூட்ட விருப்பதாகக் கூறினார். அக்கூட்டத்துக்கு அகாலிதள், ஜனதா. மார்க்ஸிஸகம்யூனிஸ்ட்கட்சி உட்பட இந்தியாவின் எதிர்க்கட்சிகள் அழைக்கப்படுமெனவும் அவர் கூறினார். [கி]

# 250 பவுண் நகை கொள்ளை!

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சிவன் கோயில் உரிமையாளர் வீட்டில் 250 தங்கப்பவுண் எடையுள்ள நகைகள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வீட்டிலிருந்தவர்களைக் கட்டிப்யோட்டுவிட்டு இருமணி நேரம் நடைபெற்ற 'வேட்டை'யின்போதே மேற்படி நகைகள் கொள்ளைபோயுள்ளன.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் கோவிலுக்குச் சொந்தமான 125பவுண் நகைகளும் அடங்கியிருந்தனவாம்.

**மாவிட்டபுரத்தில்**

மாவிட்டபுரத்தில் வீடொன்றில் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த இனந்தெரியாத ஆயுதபாணிகளான நபர்கள் வீட்டிலிருந்த நகை, பணம் முதலியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மாவிட்டபுரம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள எஸ். சதாசிவம் என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது.

## ரஷ்யாவிலும் பேசுவாராம்!

(ராய்ட்டர்)

ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன ரஷ்யாவில் இருககும்போது இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பாக ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவார் என எதிர்பார்க்கப்படுவதாக மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், தமிழ் கெரில்லாக்கள் தனிநாடு ஒன்றை மாத்திரம் அமைப்பது மட்டுமல்லாமல், முழுநாட்டையும் மார்க்ஸிஸ நாடாகமாற்றவேண்டுமென்று கூறியுள்ளனர். இந்தியாவில் தமிழ்க் கெரில்லாக்களுக்கு பயிற்சி அளிப்பது பற்றியும், புகலிடம் அளிப்பது பற்றியும் ரஷ்யத்தலைவர்களுடன் ஜனாதிபதி பேசுவார். [ய-வ]

## புத்தாண்டுப் பொருள்விநியோகம் கூ.மொ.ச ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வடக்குகிழக்கு மாகாண மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களும் பாவனைப் பொருள்களும் விநியோகிப்பதற்குக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

வடக்கு, கிழக்கு அரசாங்க அதிபர்களின் ஆலோசனையின் பேரில் இவ்வுணவு விநியோக முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (ய-வா)

## பந்தோபஸ்து அமைச்சின்கீழ் பழைய பாராளுமன்றம்

(கொழும்பு)

பழைய பாராளுமன்றக் கட்டடத்தையும் பேரைஏரியையும் பராமரிக்கும் பொறுப்பு தேசிய பந்தோபஸ்துஅமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேசிய பந்தோபஸ்து அமைச்சின்கீழ் இயங்கிவரும் துறைமுக அபிவிருத்தி அதிகார சபை பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளும்.

## ● தாதிமாருக்கு ஆதரவாக

# புத்தாண்டை துக்கதினமாக அனுஷ்டிக்கக் கோரிக்கை!

(கொழும்பு

தற்சமயம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தாதிமார்களின் பிரச்னையை அரசாங்கம் சரியானமுறையில் அணுகாத பட்சத்தில் எதிர்வரும் புத்தாண்டுத்தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு கொழும்பு அபயராம விஹாரை மண்டபத்தில் 'சுஜாதா குலாங்கன சங்கம்' நடாத்திய கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தாதிமார்களுக்கு ஆதரவாக நடைபெற்ற இக்கூட்டத்தில் தென்னிலங்கை இசைக்குயில் நந்தா மாலினி நடாத்திய சங்கீதக் கச்சேரி மூலம் திரட்டப்பட்ட 25 000 ரூபா தாதிமார் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. (ஷ)

## ஈரான் குண்டுவீச்சு: காயமுற்ற வல்வை இளைஞரும் பலி

(வல்வெட்டித்துறை)

'பெற்ரோ ஸ்ரார்-16' என்ற எண்ணைத் தாங்கிக் கப்பல் ஈரானிய போர்விமானங்களின் குண்டுவீச்சுக்குஇலக்காகியதில் படுகாயமடைந்த மற்றுமொரு இளைஞரான வல்வையைச் சேர்ந்த யோகராஜ் செல்வரத்தினம் (25 வயது) ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அக்கப்பலில் கடமையாற்றிய வேறுசில இளைஞர்களும் படுகாயம் அடைந்துள்ளனர் எனத்தெரிகிறது.

## பட்டிக்குடியிருப்பில் மாடு வாங்கச்சென்ற மூவர் வெட்டிக் கொலை!

(வவனியா)

நெடுங்கேணியிலிருந்து மாடு வாங்கச்சென்ற மூன்று தமிழர்கள், கண்டதுண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்த 6 ஆயிரம் ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இக்கோரக் கொலைச்சம்பவத்தில் ஊர்காவல்படையினரே ஈடுபட்டுள்ளதாகக்கூறப்படுகிறது.

இம்மூவரும் மாலைநேரம் குமுழமுனைக்கு மாடு வாங்கச் சென்றுகொண்டிருந்த பொழுது ஹென்பாம்-டொலர்பாம் அருகிலுள்ள பட்டிக்குடியிருப்பு என்னுமிடத்தில் வைத்து வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்கள்,

கோரக்கொலையுண்டுகிடந்த இம்மூவரின் சடலங்களும்நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டன (மா)

## ஹெலிகொப்டர் சூடு

[மாவிட்டபுரம்]

பலாலி விமான நிலையசுற்றுடல் பகுதியில் நேற்றுத்தொடர்ச்சியான ஹெலிகொப்டர் சூடு இடம்பெற்றதால் எங்கும் பரபரப்பு ஏற்பட்டது.

காலை 8 மணி முதல் நண்பகல்வரை இச்சூடு இடம்பெற்றதாகவும் பலாலி விமானத்தளத்தில் அடுத்தடுத்து வந்திறங்கிய விமானங்களுக்குப்பாதுகாப்பளிக்கும் முகமாக இச்சூடு இடம் பெற்றிருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

## அரிசி பகிர்ந்தளித்தார்

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ வீடமைப்புத் திட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு வர்த்தகப் பிரமுகர்களின் ஆதரவுடன் சகோதரி மரியரோசா 5 மூடை அரிசியைப் பகிர்ந்தளித்தார்.

இந்தமக்களுக்கு அரசு வழங்கிவந்த பங்கீட்டுப்பொருள்கள் கடந்த இரண்டு மாதங்களாக நிறுத்தப்பட்டதாகவும் அதனால் அவர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாகவும் கூறப்படுகின்றது. இக்குடும்பங்களை நேரில் வந்து பார்த்த வண. சகோதரி மேற்படி அரிசியை வழங்க ஏற்பாடுசெய்தார்.

## மரண அறிவித்தல்

### K. E. செல்லப்பா

சரவணை கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு கொச்சிக்கடை வர்த்தகரும், (செல்லப்பா அன்சன்ஸ்) இவர் காலஞ்சென்ற மனோன்மணியின் கணவரும், பேரின்பநாதனின் அன்புத்தந்தையும், புவனேந்திராவின் மாமனும், சர்மிலா சந்துருவின் பேரனும், K. E. கந்தையா, காலஞ்சென்ற கதிரவேலு, காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னத்துரையின் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 9-4-86 பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

(C 1673) பேரின்பநாதன்

### திருமதி பாக்கியம் சீனிவாசகம்

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சீனிவாசகம் காலமானார். இவர் காலஞ்சென்ற கோலாலம்பூர் சீனிவாசகத்தின் அன்புமனைவியும், வள்ளியம்மையின் அன்புத் தாயாரும், நாகம்மாவின் சிறிய தாயாரும், கந்தையாவின் மைத்துனியும், செல்வரட்னம், காலஞ்சென்ற கந்தையா(நெடுங்கேணி) ஆகியோரது அன்புமாமியாரும், திருச்செல்வம் (பிரான்ஸ்) திருச்செல்வி, திருவள்ளுவர் (சிவாஸ்ரோர்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்), திருப்பதி (பிரான்ஸ்), தவமணி திருச்சிற்றம்பலம் (சிவாஸ்ரோர்ஸ்)' திருவருட்செல்வி (வேம்படி மகளிர் பாடசாலை), கோபாலகிருஷ்ணன் (நெடுங்கேணி), சிவகாம சுந்தரவல்லி, மனோரஞ்சிதம், சச்சிதானந்ததேவி, இரத்தினசிங்கம், புண்ணியசிங்கம், எழில்ராணி, தர்மாவதி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புப்பேத்தியும், சுதாகரன், சுதர்சினி, நந்தினி, பத்மினி, குணம், வசந்தமலர், திருநீலகண்டன், மகேந்திரன், வதனராஜா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-04-86 வியாழக்கிழமை (இன்று) மாலை 4-00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். தகவல்: செ. திருவள்ளுவர்,

(C 1676) சிவா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.

### சின்னத்தம்பி தம்பிஐயா

கந்தரோடையைச் சேர்ந்த இளைப்பாறிய மலாயன் புகையிரதநிலைய அதிபர் சின்னத்தம்பி தம்பிஐயா 7-4-1986 காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், மகேஸ்வரி, Dr. நடராஜா (U K ), மனோன்மணி, மங்கயற்கரசி, பாலயோகினி ஆகியோரின் அருமைத்தந்தையும், காலஞ்சென்ற தம்பிராசா, ராணி(UK) சரவணமுத்து(Retired Head Master), அமிர்தலிங்கம், (Postmaster K K S.), சிவனேசன் (Surveyor saudi Arabia) ஆகியோரின் அருமைமாமனுரும், காலஞ்சென்ற கந்தையா, முருகேசு, சரவணமுத்து, செல்லையா கணபதிப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் மைத்தனரும், பாலசிங்கம் (Medical Asst Hatton), சரோஜினிதேவி சுதந்திரமங்கயற்கரசி கதிர்காமநாதன் (Food Supply K K S ), சுரேந்திரன் (U K), ரவீந்திரன் (U K.), சிவகுமார் (Belgium) வனஜா, அனுஷா, (Courts Mallakam), சுபத்திரா பாஸ்கரன், (grindlays Bank), பிரபாகரன் (2nd nav Officer, greece). கருணாகரன் (India), பிரியதர்சினி (Ramanathan acadamy), ஞானச்சந்திரன் (France), சுரேஷ் (India), சுகந்தி (Ramanathan acadamy), துஷ்யந்தி, அருணா, ஆராதனா (Uduvil girls College) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கந்தரோடை இல்லத்தில் வெள்ளிக்கிழமை (11-04 86) காலை 9மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C 1685) தகவல்: திருமதி தம்பிஐயா

### வேலுப்பிள்ளை இராமலிங்கம்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அராலி இந்துக்கல்லூரி ஆகியவற்றின் முன்னைநாள் ஆசிரியர் வேலுப்பிள்ளை இராமலிங்கம் '-4-86ல் காலமானார். இவர் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சின்னையா மணியகாரன் ஆனைக்கோட்டை, காலஞ்சென்ற வைரமுத்து ஆகியோரின் சகோதரரும், Dr. கனகராசா (U S A ), திருமதி மகாதேவி கந்தசாமி. Eng. பரமேஸ்வரன் (N W S and D B ), திருமதி பத்மாதேவி கதிரேசன் (U K ) ஆகியோரின் சிறியதந்தையாரும், Dr. சச்சிதானந்தம், ஒப்பிலாமணி (இளைப்பாறிய கிராம சேவகர்) ஆகியோரின் மைத்துனருமாவாா. அவரது இறுதிக்கிரியைகள் 10-4-86 வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் ஆனைக்கோட்டை வைரமுத்தர் வளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக ஆனைக்கோட்டை மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டிக்கொள்கிறோம்.

வைரமுத்தர் வளவு, C. K. Kanthaswami.
ஆனைக்கோட்டை. C 1698

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.